வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று ரூபா 24 பில்லியன் மீதி தொகையொன்றுடன் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துடன் (எம்ஆர்ஜஏ) தொடர்புடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களினை உள்ளடக்கியிருந்தது. ஆரம்பத்திலிருந்து எம்ஆர்ஜஏ இன் செயற்பாடுகளில் சரிவொன்று காணப்பட்டிருந்ததுடன் தற்போது சில உள்நாட்டு விமானங்களினைத் தவிர எவ்வித சர்வதேச விமான நகர்வுகளும் காணப்படவில்லை.

விமான நிலையத்தின் முழுமையான சாத்தியாயமான இந்த அறிக்கை திகதியில் உள்ளவாறு எம்ஆர்ஜஏ இன் பொருளாதார செயலாற்றல் மோசமடைந்து காணப்பட்டமையினால் கிட்டிய எதிர்காலத்தில் தேறப்படுமென எதிர்பார்க்கப்படாமையினால், சொத்துக்களின் காலக்கழிவு எல்கேஏஎஸ் 36 இன் பிரகாரம் காலக்கழிவின் குறிகாட்டிகளாக இவை இனங்காணப்படுமென நான்கருத்திற் கொள்கின்றேன். எவ்வாறாயினும், தனியானதொரு காசு உருவாக்கும் அலகாக இது இருக்கின்றது என்ற அடிப்படையில், எம்ஆர்ஜஏ காலக்கழிவடையக்கூடிய ஏதேனும் குறிகாட்டி காணப்படுகின்றதா என பரீட்சிப்பதற்கு காலக்கழிவு மதிப்பீடொன்றை முகாமைத்துவம் மேற்கொண்டிருக்காததுடன், ஆகையினால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்றில் பதியப்பட்ட தொகைகளுக்கு பிரயோகிக்கப்பட வேண்டிய ஏதேனும் காலக்கழிவு பதிவழித்தல் காணப்படுகின்றதா என்பதை தீர்மானிக்க காலக்கழிவு பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எம்ஆர்ஜஏ இன் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீள்அறவிடக்கூடிய தொகையினை மதிப்பிடுவதற்கான தகவல்கள் கணப்படாமையினால், 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அவ்வாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மிகுதி தொகையினை தன்னால் திருத்திப்பட முடியாதுள்ளது.

மேலும், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 11(iii) இற்கு எனது கவனத்தைச் செலுத்துகின்றேன். இந்திய அரசாங்கத்துடன் (ஜீஓஐ) கலந்துரையாடல்கள் காணப்பட்ட போதிலும், ஜீஓஐ இடமிருந்தான முன்மொழிவு இதுவரை இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதனச் செலவினத்திற்கான (வாக்குபண நிதி) அரச மானியம் மற்றும் நிறுத்தி வைத்த வருமான நிதியுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்களினை ஒன்றினைப்பதற்கான அடிப்படையினை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1.1 இற்கு எனது கவனத்தைச் செலுத்துகின்றேன். 2005 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில், திறைசேரி செயலாளர் 2006 பெப்ரவரி 04 ஆந் திகதிய பிஈ/ஜீஓசீஓ/1/1 ஆம் இலக்க அவரின் கடிதத்தின் மூலம் பின்வரும் நிபந்தனைகளினை பூர்த்திசெய்வதற்கு கம்பனியினை வழிகாட்டியிருந்தார்.

i. அரசினால் தற்போது கொண்டுள்ள விமான நிலையத்தின் காணி மற்றும் கட்டிடம் மற்றும் கம்பனியில் காணப்படும் ஏனைய நகரக்கூடிய மற்றும் நகராத சொத்துக்களினை பெறுமதியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ii. இலங்கை அரசினால் தற்போது சேவையாற்றும் விமான நிலைய அபிவிருத்தியுடன் தொடர்புடைய பொறுப்புக்களினை கையேற்றல், மற்றும்,

iii. இடமாற்றப்பட்டமையினால் தேறிய சொத்துக்களுக்கு இலங்கை அரசிற்கு பங்குகளினை விநியோகித்தல்.

எவ்வாறாயினும், அரசினால் உரிமையைக் கொண்டுள்ள காணி மற்றும் கட்டிடங்கள் மற்றம் ஏனைய நகரக்கூடிய அல்லது நகர முடியாத சொத்துக்களினை பெறுமதியிட்டிருக்காது மற்றும் கணக்குகளுக்கு கொண்டு வந்திராது அல்லது

இடமாற்றப்பட்ட தேறிய சொத்துக்களுக்கு இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளினை விநியோகித்திராது கம்பனி பொறுப்புக்களினை மாத்திரம் கையேற்றிருந்தது.

(இ) கட்டுநாயக்கா விமான நிலைய அபிவிருத்தி செயற்திட்டம், கொழும்பு சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்திட்டம், இரத்மலானை விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு முறைமையின் நவீனமயப்படுத்தலுடன் தொடர்புபட்ட 02 கடன்களுடன் தொடர்புடைய இலங்கை அரசினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் கடன் உடன்படிக்கையொன்று இன்றி 2006 பெப்ரவரி 04 இல் திறைசேரி செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் கம்பனியின் கணக்குகளில் பொறுப்பாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. மேற்குறித்த கடன்கள் தொடர்பில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மொத்தக் கடன் நிலுவை ரூபா 10,139 மில்லியனாக் காணப்பட்டது. இந்தக் கடன்கள் கடன் பதிவுகளினை நகலெடுப்பதன் மூலம் குடியரசுக் கணக்கில் பொறுப்பாகக்கூட காட்டப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது.

மேலும், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு (எம்ஆர்ஐஏ) பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் ஏதேனும் வலிதான உடன்படிக்கை அல்லது இடமாற்றமின்றி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினூடாக (எம்ஓயூ) பொதுத் திறைசேரியினால் கம்பனிக்குகூட இடமாற்றப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிலுவையாகவுள்ள கடன் மீதி ஐ.அ.டொலர் 159 மில்லியனுக்குச் சமமான ரூபா 24,643 மில்லியனாகக் காணப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 பெறவேண்டிய கணக்குகள்**

ரூபா 18,078,565 கூட்டுத்தொகையான பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட்டிராது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இரண்டு வருடங்களுக்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானசேவை அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு | விமானநிலையங்களை ஸ்தாபித்தல் அல்லது விரிவுபடுத்துதல் மீதான பிரதான திட்டம் 2017 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டோ அல்லது இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டோ இருக்கவில்லை. |
| (ஆ) சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பு (ஐசீஏஓ) நியமங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டில் இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபையால் வழங்கப்பட்ட பரீட்சிப்பு அறிக்கை | பாதுகாப்பு சேவைகளின் தலைவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தேசிய சிவில் விமான பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், விசேட பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிகள் மீதான 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.2 ஆம் பந்தி | திரவத்தன்மை நிலமை மற்றும் கடன்பெறுதல்கள் மீதான கூற்றுக்கள், மூலப்பொருள் பெறுகையின் பெறுமதி மற்றும் மனித வளங்கள் தொடர்பான கூற்று உள்ளடங்கலாக ஒவ்வொரு மாதாந்த சபைக் கூட்டங்களிலும் மாதாந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்தக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.2.5 ஆம் பந்தி | கடன்பட்டோர்கள், கடன்கொடுத்தோர்கள் மற்றும் இருப்புக்கள் மற்றும் தாமதமான நகர்வினை இனங்காட்டக்கூடிய கூற்றுக்கள் மற்றும் வழுக்கற்றுப்போன இருப்புக்களின் வயதுப் பகுப்பாய்வு மாதாந்த அடிப்படையில் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | 5.1 ஆம் பந்தி | கம்பனி அதன் எதிர்கால விழிகாட்டல்களினை தீர்மானிப்பதன் மூலம் கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. |
| (iv) | 5.2.4 ஆம் பந்தி | நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் சபையின் அங்கீகாரத்திற்கு கம்பனி அதன் வரைபு பாதீட்டினை சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (v) | 7.2 மற்றும் 7.3 ஆம் பந்தி | செயற்பாட்டுக் கையேடுகள் மீளமைக்கப்பட்டு தொடர்ச்சியாக நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் பொதுத்திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் வரிசை அமைச்சிடமிருந்து செயற்பாட்டுக் கையேட்டிற்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 7.4.5 ஆம் பந்தி | கம்பனியின் சொத்துக்களினை மெய்மையாய்வு செய்யும் பொருட்டு வருடாந்த மற்றும் விசேட பொருள் அளவைச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | 9.2(ஈ) பந்தி | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரியில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | 9.3.1(i) ஆம் பந்தி | கம்பனியின் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் மேம்படுத்தல்கள் (எஸ்ஓஆர்) பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ix) | 9.14 ஆம் பந்தி | எச்ஆர்எம் கையேட்டின் நடைமுறைகள் பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கம்பனி தொடர்புடைய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து அவற்றை கழிப்பனவு செய்திராது அதன் ஊழியர்களின் சார்பில் மீளாய்வாண்டின் போது உழைக்கும் போதே செலுத்தும் வரி (பிஏவைஈ) மற்றும் வரி மீதான வரி ரூபா 19,849,402 இனை செலுத்தியிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 6,909 மில்லியன் வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 10,820 மில்லியன் வரிக்கு முன்னரான தேறியலாபத்தினை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 3,911 மில்லியன் ஆன முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. செயற்பாட்டு வருமானம் மற்றும் தேறிய நிதி வருமானம் முறையே ரூபா 2,481 மில்லியன் ரூபா 1,369 மில்லியனால் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக தாக்கமளித்திருந்தன.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

**3.2.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்**

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான கம்பனியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 2.78 | 2.65 | 2.09 | 1.68 | 1.29 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 2.71 | 2.60 | 2.06 | 1.65 | 1.23 |
| தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 52 | 38 | 15 | 40 | 39 |
| பங்கொன்றிற்கான உழைப்புக்கள் (ரூபா.) | 43,574 | 34,598 | 4,084 | 17,058 | 17,768 |
| தேறிய சொத்துக்கள் மீதான திரும்பல் (சதவீதம்) | 37 | 42 | 7 | 32 | 48 |
| பிரயாணியொருவருக்கான வருமானம் (ரூபா.) | 2,085 | 1,938 | 1,846 | 1,785 | 1,652 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறுங்கால வங்கி வைப்புக்கள் 146 சதவீதத்தினால் அதிகரித்தமை நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதத்தில் அதிகரிப்புக்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) வருமானம் 14 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் நிதி வருமானம் 47 சதவீதத்தினால் அதிகரித்தமை காரணமாக மீளாய்வாண்டின் போது தேறிய இலாப விகிதம் 4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதன் விளைவொன்றாக பங்கொன்றிக்கான உழைப்புகூட 26 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

(அ) கம்பனியின் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளின் (கேபிஐ) அடிப்படையில், 2013 இலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான கம்பனியின் பௌதீக ரீதியான செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| பிரதான செயலாற்றல் குறிகாட்டி | உள்ளபடியான அடைதல்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
| சர்வதேச விமான அசைவுகளின் எண்ணிக்கை | 62,850 | 61,637 | 56,156 | 54,960 | 51,972 |
| மொத்தப் பிரயாணி அசைவுகளின் எண்ணிக்கை | 9,957,502 | 9,466,248 | 8,505,740 | 7,780,724 | 7,330,421 |
| போக்குவரத்திலுள்ள பிரயாணிகளின் எண்ணிக்கை | 1,501,679 | 1,285,756 | 1,227,451 | 1,273,037 | 1,370,266 |
| மொத்தப் பிரயாணிகளிற்கான போக்குவரத்திலுள்ள பிரயாணிகள் விகிதம் | 1:6.6 | 1:7.4 | 1:6.9 | 1:6.1 | 1:5.3 |
| சரக்கு அசைவுகள் (மெற்றிக் தொன்கள்) | 274,044 | 248,347 | 220,422 | 209,607 | 194,020 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விமானமொன்றை கையாளுவதற்கான மொத்தக் கிரயம் (ரூபா.'000) | 202 | 216 | 256 | 171 | 177 |

பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (கேபிஐ'எஸ்) மீதான வருடாந்த இலக்குகள் கம்பனியினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், கணக்காய்வில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுக்கு எதிராக உள்ளபடியான செயலாற்றலினை ஒப்பீடுசெய்ய முடியாது காணப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம், ரூபா 75,190,191 பெறுமதியுடைய கட்டிடமொன்று ஹோட்டலொன்றின் நிர்மாணத்திற்கு 2017 மே 31 இல் அகற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 5,800,000 தொகையொன்று மாத்திரம் இந்தக் கட்டிடத்தின் அகற்றலிருந்து தேறிக் காணப்பட்டது. ஆகையினால், அந்த அகற்றிலிருந்து ரூபா 69,390,191 பாரிய நட்டமொன்றினை கம்பனி தாங்கிக்கொண்டது.

(ஆ) Enterprise Resource Planning (ERP) முறைமையொன்றின் அமுல்படுத்தலுக்கான ஒப்பந்தம் 08 மாதங்களுக்கு ரூபா 248.6 மில்லியன் பெறுமதிக்கு 2012 யூன் 29 இல் தனியார் ஒப்பந்தகாரரொருவர்க்கு அளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரர்க்கு ரூபா 27 மில்லியன் தொகையொன்றை கம்பனி செலுத்தியிருந்ததுடன் ஒப்பந்த காலப்பகுதி 2016 ஒக்தோபர் 31 வரை நான்கு சந்தர்ப்பங்களில் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2016 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்தத்தினைப் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தார். ஆகையினால், ரூபா 24.86 மில்லியன் தொகையான செயலாற்றல் முறி 2017 சனவரி 03 இல் காசாக்கப்பட்டிருந்தது. கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 2.6 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், ஒப்பந்தகாரர் செயலாற்றல் முறியின் அறவிடுகைக்கு கம்பனிக்கு எதிராக வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார்.

(இ) சுற்றுலா விடுதியொன்றின் நிர்மாண நோக்கத்திற்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா 7 மில்லியன் தொகையொன்றை செலவழிப்பதன் மூலம் தனியார் தரப்பொன்றிடமிருந்து காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் இந்தக் காணி அரசிற்குச் சொந்தமாகக் காணப்படுகின்றதுடன் அதன் பின்னர் ஹதரகம பிரதேச செயலகம் கம்பனிக்கு 30 ஆண்டுகள் குத்தகையின் அடிப்படையில் காணியை அறிந்திருந்தது என ஹதரகம பிரதேச செயலகம் அறிவித்திருந்தது. மேலும், கம்பனி இது தொடர்பில் தனியார் தரப்பிற்கு எதிராக வழக்கொன்றை தாக்கல்செய்ய தவறியிருந்தது.

(ஈ) தகவல் தொழில்நுட்ப முறைமையினை அமுல்படுத்துவதில் உயர் இடர் இனங்காணப்பட்டதுடன் தொடர்ச்சியான மாற்றங்கள் தேவைப்படுகின்றமை மற்றும் தொகுதிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய முறைமைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இன்றி முறைமை இயங்குகின்றமை காரணமாக இந்த முறைமையின் தொடர்ச்சி ஐயத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

(உ) சபை 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய 050/2013 ஆம் இலக்க அதன் தீர்மானத்தின் மூலம் காப்புறுதிக் கொள்கைக்குப் பதிலாக சுயமாக நிர்வகிக்கப்படும் விசேட நிதியமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், கம்பனி 2017 திசெம்பர் 31 வரையிலும் அவ்வாறான நிதியத்தினை உருவாக்க எவ்வித நடவடிக்கைகளினையும் எடுத்திருக்கவில்லை.

(ஊ) ரூபா 13,262,977,618 மொத்த கிரயமொன்றிலுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக

பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. அவற்றில், ரூபா 2,534,638,577 கிரயத்தினையுடைய சொத்தொன்று 20 வருடங்களுக்கு அதிகமாக முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பயன்படுத்தத்தக்க சொத்துக்களினை மீளபெறுமதியிடுவதற்கு மற்றும் பயன்படுத்த முடியாத சொத்துக்களினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 தீர்ப்பனவு செய்யப்படாத கணக்காய்வு விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து தானாக முன்வந்து ராஜினாமாச் செய்த ஊழியரொருவர்க்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா 2.5 மில்லியன் இழப்பீடொன்றை கம்பனி செலுத்தியிருந்தது.

(ஆ) 2006 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டத்தினூடாக 2007 மற்றும் 2008 ஆண்டுகளுக்கான சுங்கக் கட்டணமாக கம்பனியினால் ரூபா 8.7 மில்லியன் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. செயற்படுத்தப்பட்ட மேலதிக வேலைகளுக்கான உடன்படிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் கட்டம் I படி I இன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் பூர்த்தியின் பின்னர் மேலதிக உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 92 மில்லியன் தொகையான வெளியீட்டு பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 150 மில்லியன் செலுத்துகை அங்கீகரிக்கப்பட்ட மேலதிக மதிப்பீடுகளின்றி செலுத்தப்பட்டிருந்தது.

### 4.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 1997 ஒக்தோபர் 24 இன் 124 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், வெற்றிடமாகவுள்ள பதவியொன்றின் கடமைகளினை மேவுகை செய்வது 03 மாதங்கள் காலப்பகுதியொன்றுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், நான்கு பிரதி பிரிவுத் தலைவர்கள் 01 தொடக்கம் 05 வருடங்கள் வரையான வீச்சினையுடைய காலப்பகுதிகளுக்கிடையில் பதில் அடிப்படையில் வெற்றிட பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கம்பனியின் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் மேம்படுத்தல்கள் திட்டம் காணப்படாமை. |
| (ஆ) | கணக்கீடு | கம்பனியில் ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான கணக்கீட்டு முறைமையொன்றின் பற்றாக்குறை. |
| (இ) | பெறவேண்டியவைகளும் செலுத்தவேண்டியவைகளும் | நீண்டகால நிலுவை மீதிகள் கணக்குகளில் அறவிடப்படாமல்/ தீர்ப்பனவு செய்யப்படாமலிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஈ) | சொத்து முகாமைத்துவம் | (i) பொருள் அளவைச் சபையினை நடாத்துவதற்கு கவனஞ்செலுத்தப்படல் வேண்டும். |
| | | (ii) சொத்துக்களை குறியீடிடுதல் காணப்படாமை மற்றும் சொத்துக்கள் பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்படாமை. |
| (உ) | தகவல் தொடர்பாடல் பொதுக் கட்டுப்பாடுகள் | தற்போதைய வேலைச் சூழலுக்கு ஏற்ற முறையான வடிவமைக்கப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட நிதி முறைமையின் பற்றாக்குறை. |